**20.07.2023 MCOP.No. 102/2020**

**ம.சா.1 பெயர்:** காளிதாஷ்

<u>**சாட்சி ஆஜர். பிரமாணம் செய்யயப்பட்டார் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

விபத்தில் காலமானவர் என் தாயார் ஆவார். நான் இம்மனுவில் 2-ம் மனுதாரர். 28.09.2019-ல் சின்ன கரடியூரில் விபத்து ஏற்ப்பட்டது. மதியம் 12 மணியவில் விபத்து ஏற்பட்டது. என் அப்பா, அம்மா மற்றும் என்னுடை 8 மாத குழந்தை ஆகியோர்கள் வண்டியில் சென்று கொண்டு இருந்தார்கள். என் தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. என் தகப்பனாருக்கு இருசக்கரம் வாகனம் ஓட்டுவதற்கு உரிய உரிமம் இல்லை என்றாலும் தாக்கல் செய்து உள்ளது உரிமம் இலகு ரக வாகனத்திற்கு உரியது என்றாலும் சரியல்ல. நானும் என் மனைவியும் வேறு ஒரு வண்டியில் சுமார் 60 அடி தொலைவில் கோவிலுக்கு சென்று திரும்பி பின் தொடந்து வந்து கொண்டு இந்தோம். சேன்ரோ கார் என்னை கடந்து சென்று என் தகப்பனார் ஓட்டி சென்ற வாகனத்தின் மீது பின் பக்கத்தில் மீது மோதி விபத்து ஏற்பப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் என் தகப்பனார் வாகனத்தில் பின்புறத்திலும் சேன்ரோ வாகனத்தின் முன் பக்கம் சேதாரம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றாலும் இரு வாகனங்களின் பக்கவாட்டில் மட்டுமே சேதாரம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், என் தகப்பனார் வாகனத்தின் பின் பக்க இன்டிகேட்டரில் மோதி இழுத்து சென்றதால் காரின் பக்க வாட்டில் சேதாரம் ஏற்ப்பட்டு உள்ளது. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், வாகனத்தின் பின் பக்கம் அடிப்படவில்லை என்றாலும் சரியல்ல. என் தாயாரை போச்சம்பள்ளி அரசு மருத்துவ மனைக்கு அழைந்து சென்றேன். என் தாயாருக்கு பின் தலையில் அடிப்பட்டு இருந்தது. போக்கு வண்டியில் அழைத்து வந்து பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவ மனைக்கு அழைத்து வந்தோம். சம்பவ சமயத்தில் என் தகப்பனார் தலை கவசம் அணிந்து இருந்தார், என் தாயார் அணியவில்லை. விபத்து சமயத்தில் உரிய உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்ட தெரியாமல் வலது புறமாக எவ்வித சிக்கினல் காண்பிக்காமல் திரும்பிய போது விபத்து ஏற்பட்டு விட்டது என்றால் சரியல்ல. கார் ஓட்டுநரின் அஜாக்கிரதையாலோ கவன குறைவாலும் விபத்து ஏற்பட்டவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் வாகனத்தை ஓட்டி சென்றதால் அவரை காப்பாற்றுவதற்காக கார் ஓட்டுநர் கவன குறைவால் விபத்து ஏற்பட்டது என்றும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

SENTHIL KUMAR RAJAVEL

Subordinate Judge
Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai